

அமரர்

# உயர்திரு.சுந்தரராசா சீவரத்தினம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## "சந்திரோதயம்"

05.03.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



யாழ்/நெடுந்தீவைப் பூர்வீகமாகவும், கிளி/உருத்திரபுரத்தைப்
பிறப்பிடமாகவும், இல:91/1, சிவநகரை வதிவிடமாகவும்
கொண்ட

# அமரர்
# சுந்தரராசா சீவரத்தினம்

அவர்களின்
சிவபதப்பேறு குறித்த "சந்திரோதயம்"
நினைவு சிலாசாசனம்

## 05.03.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உங்கள் பாதமலர்த் திருவடிகளுக்குச் சமர்ப்பணம்

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்த்
திகழ்ந்து எம் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும்
உறுதுணையாக இருந்து அன்போடும்,
பண்போடும், பாசத்தோடும் எம்மைப் பேணிக்
காத்து நல்வழிப்படுத்தியவரை இறைவன்
தன்னுடன் அழைக்க ஆசை கொண்டு
எண்ணியதால் இன்று எமை விட்டுப் பிரிந்து
இறைபதம் சரணடைந்த எங்கள் அன்புத்
தெய்வத்தின் பாதார விந்தங்களுக்கு
**"சந்திரோதயம்"** எனும் மலரினை
சமர்ப்பிக்கின்றோம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இங்ஙனம்
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"



மண்ணில்
06
06
1958

விண்ணில்
03
02
2021

அமரர்

உயர்திரு சுந்தரராசா **சீவரத்தினம்**

அவர்களின்

# திதி வெண்பா

சர்வ மங்களம் தரும் சார்வரி வருடமதில்
தை இருபத்தோராம் நாள் சஷ்டித்திதியில்
உத்தமனாம் சீவரத்தினம் எனும் சீமான்
திங்கள் சூடிய சிவன்தாள் சென்றடைந்த நன்நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுடன்...



மண்ணில்
27
10
1989

விண்ணில்
07
03
2008

அமரர்

## சீவரத்தினம் ஷாருகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின் மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

## தேவாரம்

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற் கரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்தமா கடலே
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்
வந்துநின் இணையடி தந்தே

## திருவிசைப்பா

ஏக நாயகனை இமையவர்க்கு அரசை
என்னுயிர்க்கு அமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல்வணற்கு அருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகு திருவீழி
மிழலை விண்ணிழி செழுங் கோயில்
யோக நாயகனை அன்றி மற்றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமையண வாளனுங் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போது உன்னடியின்
கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர ...... எனவோதும்

முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும் ...... அடிபேணப்

பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் ...... இரவாகப்

பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் ...... ஒருநாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு ...... கழுதாடத்

திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக ...... எனவோதக்

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென ...... முதுகூகை

கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல ...... பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க ! மலிவளஞ் சுரக்க! மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க!
நான்மறை யறங்கள் ளோங்க! நற்றவம் வேள்வி மல்க!
மேன்மை கொள் சைவநீதி விளங்குக! உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

மனிதர்கள் பெறும் புகழ் இரண்டு வகைப்படும்.
ஒன்று பெற்றுச்சாவது, இன்னொன்று செத்துப் பெறுவது.
சரித்திரத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் பெற்றுச் செத்தவர்கள்.
கோடிக்கணக்கானவர்கள் செத்துப் பெற்றவர்கள்!

– கண்ணதாசன் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் திரு. சுந்தரராசா சீவரத்தினம் அவர்களின் வாழ்க்கை பாதையில்...

வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ்ப்பாண மாவட்டத்தின் தென்மேற்கே அமைந்துள்ள சப்த தீவுகளில் ஒன்றான அலை எழும்பி நுரை ததும்பி கரை ஒதுங்கும் அழகுடன், தென்னையும், பனையும் தேன் வார்க்க பாறாங்கல் வேலிப்படையுடன் நெய்தலும், மருதமும் கலந்த இயற்கை அழகு கொண்ட பால்தீவு, பசுந்தீவு என்று பல்வேறு பெயர்களால் அழைக்கப்படும் நெடுந்தீவின் வம்சாவழி வந்த மாண்புமிகு வளங்கொழிக்கும் உருத்திரபுரத்தை வசிப்பிடமாக கொண்டிருக்கும் சுந்தரராசா நாகமுத்து தம்பதியினரின் தவப்பயனாய் பெற்றெடுத்த புத்திரனாய் 1958.06.06 வியாழக்கிழமை அன்று வந்துதித்தார்.

சீவரத்தினம் என நாமமிட்டும் **"சந்திரா"** என பாசமாயும் அழைக்கப்பட்டார். தரணியிலே சூரியனாய் பிரகாசித்தும் பண்பிலே பூரண சந்திரனாய் விளங்கியும் பார்ப்போரை பிரமிக்கும் அழகுடனே மழலை மொழி பேசி வளர்ந்து வரும் வேளையில் தனது மூன்று வயதளவில் பெற்றோரை இழந்து தனது இரு கண்களான இரண்டு அண்ணா (இராசரத்தினம்) ஒரு அக்கா (சரஸ்வதி) வுடனும் அம்மம்மா (கதிராசிப்பிள்ளை) அரவணைப்புடனும் பெரியம்மா (நாகம்மா) சின்னம்மாவுடனும் (கனகரத்தினம்) கூடி வாழ்ந்திருந்தார்.

பள்ளிப் பருவமதில் துள்ளித் திரிந்து பண்போடு உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில் பார் போற்றும் கல்விதனை பண்போடு கற்று வந்தார். அவர் பணிவும் துடிப்புமே தனியிடத்தை ஆசான் மனதிலே பதிந்திடவும் பண்பான பிள்ளையென பலர் பாராட்டும் பெற்றிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றார், உறவினர்கள், அயலவர்களுடன் உண்மை அன்பு செலுத்தி நல்ல உள்ளத்தில் இடம் பிடிக்கும் உத்தமனாய் வாழ்ந்திருந்தார். தன் அக்கா, அண்ணாவிற்கு நல்ல தம்பியாகவும், உடன் பிறவாத சகோதரர்ளுக்கு அன்புத் தம்பியாகவும், ஆசை அண்ணாவாகவும், அத்தான் அண்ணிக்கு உத்தம மைத்து னராகவும் விளங்கினார்.

இவை ஒரு சேர வைத்து தமது குடும்பப் பொறுப்பினைக் கருத்தில் கொண்ட தந்தையின் வம்சாவழித் தொழிலான விவசாயத்தில் நாட்டம் காட்டினார். பல இடங்களில் (முத்தையன்கட்டு, உருத்திரபுரம்) விவசாயத்தை மேற்கொண்டிருந்தார்.

மணப்பருவம் எய்திவிட மனம் கொண்ட மனைவியாய் நெடுந்தீவை வதிவிடமாய மாண்புடனே விளங்கும் இருமரபும் தூய உயர்சைவ வேளாண் குலதிலகமான அமரர் பழனி யோகாம்பிகை தம்பதியினரின் புதல்வியான நீலாம்பாளை 1988.08.29 இல் கை பிடித்தார். இல்லறத்தில் நற்பயனாய் ஷாருகா, பிரியங்கா, யதார்த்தன், திவ்யா எனும் முத்துக்களான தம் மழலைச் செல்வங்களைப் பெற்று இன்புற வாழ்ந்திருந்தார்.

அக்காலங்களில் பொது அமைப்புக்களுடன் இணைந்து பல சேவைகளை ஆற்றியதுடன் உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம், உழவர் ஒன்றியம் விளையாட்டுக்கழகம் என்பவற்றிலும் தன்னை ஈடுபடுத்தி வந்தவர் சிவநகர் கிராம அபிவிருத்தி சங்கத்தில் செயலாளராகவும், மீள் எழுச்சிக்குழு தலைவராகவும், கமக்கார அமைப்பு பொருளாளராகவும் இருந்து மக்களுக்காக தொண்டாற்றியிருந்தார். மற்றும் ஆரம்பகாலத்தில் இருந்தே பாலையடி பிள்ளையார், உருத்திரபுரீச்சரம் (சிவன்) என ஆலயங்களிலும் தம்பணியை சிறப்புற ஆற்றியிருந்தார்.

அத்தோடு கிளிநொச்சி பொதுச்சந்தைக்குள் புத்தகசாலை ஒன்றும் நடத்திவந்தார். காலத்தின் கோலத்தால் 2008.03.07 ஆண்டு தனது மூத்த புதல்வியின் (ஷாருகா) இழப்பு அவரைப் பெரிதும் வாட்டி வதைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் பிள்ளை போல் பிறர் பிள்ளைகளையும் அன்போடு அரவணைத்து அருகிலிருந்து கவனிக்கும் பண்புள்ளம் கொண்டவர். பெறாமக்கள் மருமக்களின் அசையாத இடம் பிடித்த ஒருவர் எனலாம்

மைத்துனர்கள் மைத்துனிமார் என தம் உறவுகளை தம் மக்கள் போலும் மூத்த உறவுகளான மாமன்மார், பெரியம்மாமார், பெரியப்பாமார், அன்றி, சித்தப்பா, மாமிமாரைத், தம் பெற்றோர்களுக்குச் சமமாக மதித்து நேசித்த நேயமிக்க ஒரு பண்பாளராய்த் திகழ்ந்தார். தன் நோயை பெரிதாகக் கருதாது மருமக்கள்/பெறாமக்களின் நன்மைகளைக் கண்டு களித்து தன் பிள்ளைகளுக்கு நன்மை செய்து பார்க்க வேண்டுமென ஆசையுடன் இருந்த வேளையில் காலன் கண்பட்டதோ குளவிளக்கின் நிலை எமையெல்லாம் ஆறாத்துயரில் மூழ்கடித்து விட்டு அவர் மீளாத்துயில் கொண்டார்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**"மரணங்கள் நிச்சயமானது தான் ஆனால்**
**மரணத்துயர் தாங்கமுடியாதது"**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருத்திரபுரம் பாலையடி விநாயகரைப் பரவியமை

தெங்குக தலி பலாவுடனே
        தீங்கனி பலவும் மிக்குடைய
சங்கத் தமிழர் ஊரென்றே
        சாற்றும் உருத்திர புரத்தானே
மங்களம் அருளும் மாநிதியே
        பாலையடி மாணிக்கமே!
திங்கள் முகத்து சீவரத்தினம்
        சேர வந்தான் ஏற்றருளே!

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்



தொல்லையிரும் பிறவி சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மறுவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவாசகம் என்னும் தேன்

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க !
இமைப்பொழுது மென்னெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க !
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க !
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க !
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க !
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறந்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க !
கரங்குவிவா ருண்மகிழும் கோன்கழல்கள் வெல்க !
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க !
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநந் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விழங்கொளியாய்
எண்ணிறந் தில்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்
செல்லாது நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம் பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம ளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போல
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம் பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவமென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற்குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூரத்தமெஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொழியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கடடழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் செல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம் ——————— ☆☆☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★★★★ சைவர்களின் அபரக்கிரியைகள் பற்றிய சில குறிப்புகள் ★★★★

உலகில் அனைத்து மதங்களுக்கும் அவர்களைச் சார்ந்த மதங்களுக்கேற்ப ஒருவரின் மரணத்தின் பின் கிரியைகள் இடம்பெறுகின்றன.

சைவ சமயத்தை சார்ந்த எமக்குத் தனித்துவமான இதய சுத்தியுடன் கூடிய, பல சமயச் சடங்குகள் கிரியைகள் நடைபெறுகின்றன. இவற்றின் உண்மை விளக்கங்களை முற்றும் முழுதுமாக விரிவாகத் தரமுடியாவிட்டாலும், முக்கியமான சிலவற்றை இறந்த ஒருவரின் ஆன்மா ஈடேற்றத்துக்காக இப்பகுதியில் தரலாம். இதைச் சைவர்களாகிய நாங்கள் பின்பற்றுவது போற்றுதற்குரிய தர்மம் என்றால் அது மிகையல்ல. இவற்றைப் பயபக்தியுடன் நாம் கைக்கொள்வதால் எமக்கும் நிறைந்த ஆத்ம திருப்தி உண்டு.

**ஒருவரின் மரணத்தின் பின் இடம் பெறுவது பின்வரும் கிரியைகள்:**

1. தகனக் கிரியைகள்
2. காடாற்று
3. எட்டாவது நாள் கிரியை
4. அந்தியேட்டி அதாவது கல்லெடுப்பு
5. சபிண்டீகரணம் (வீட்டுக்கிரியை)
6. ஆட்டைத்திவசம்
7. வருட சிரார்த்தம் எனப்பிரித்துச் சுருங்கக் கூறலாம். இவற்றை இன்னும் விரிவுபடுத்தியும் கூறலாம்.
8. புரட்டாதி மாத மஹாளயம்

எவரொருவராவது வயது முதிர்ந்தோ அல்லது நோய்க்கு ஆளாகியோ மரணப்படுக்கை பாவங்களிலிருந்து விடுபட்டு மோட்ச இன்பப் பேற்றை அடைவதற்காகப் பசு தானம் செய்யப்பட வேண்டும். இதனை உத்திராந்தி தானம் எனக்கூறுவார்கள். உயிர் உடலை விட்டுப் பிரியும்போது செய்யும் கிரியையாகும். தேவார திருமுறைகளையும் ஓதவேண்டும். அவருக்கு திருநீறு அணிந்து பால் அல்லது ஏதாவது புண்ணிய தீர்த்தம் பருக்கி காதில் பஞ்சாட்சர மந்திரம் ஓத வேண்டும்.

ஒருவர் மரணமடைந்துவிட்டால் அவரைக் குளிப்பாட்டி, உடைகள் அணிவித்து தர்ப்பைப்புல் பரப்பி தெற்குப்பக்கமாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையைக் கிடத்தல் வேண்டும். தலைமாட்டுப்பக்கம் விளக்கேற்றி வைத்தல் மிக முக்கியம்.

## மரணச்சடங்கு

தந்தை தாயாருக்கு மூத்த புதல்வனே கிரியை செய்தல் வேண்டும். தந்தைக்கு சிரேஷ்ட புத்திரனும், தாயாருக்கு கனிஷ்ட புத்திரனும் கிரியைக் கடமைகளைச் செய்யும் வழமையும் உண்டு. புத்திரர்களைத் தவிர்ந்த பின்வருவோரும் செய்யலாம். மனைவி, மகள், தமையன், இளையசகோதரர், சகோதரன், தன் புதல்வன், பிதா , தாய், மருமகன், சகோதரி தம் புதல்வன், சீடன், குரு, மகள் கணவன், தோழன், எனக் கூறப்படுகின்றது. பிரதானமானவர் இல்லையாகில் இவ்வரிசைக் கிரமத்தில் புத்திரன் அல்லாத ஒருவர் கர்த்தாவாகக் கிரியை செய்வதாகில், அவர் தனது பெற்றோருக்கு எவருக்காவது ஒருவருக்குக் கிரியை செய்தவராக இருத்தல் வேண்டும்.

புத்திரர் இங்கில்லாத காரணத்தினால் மரணக்கிரியை வேறு ஆசௌச வழியிலுள்ளவர் ஒருவர் செய்தால் புத்திரர் பின்னர் வருவராகில், எஞ்சிய கிரியைகளைப் புத்திரர் செய்யலாம். அதேபோல் புத்திரர் மரணக் கிரியைகளை செய்து மற்றைய கிரியைகளுக்கு நிற்க முடியாதவிடத்து வேறு ஒருவர் கர்த்தாவாக நின்று செய்யலாம். ஆனால் ஆரம்ப கிரியைகளிலும் இவரும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அந்தியேட்டி , 21 நாட்களுக்கு மேலும்,31 நாட்களுக்குள்ளும் செய்யலாம். புத்திரர் வெளிநாடு செல்ல வேண்டுமானால் இத்தினங்கட்கு முன்னதாக அந்தியேட்டி, சபிண்டீகரணம் கிரியைகளைச் செய்ய முடியாது.

மரணக்கிரியை நடைபெற உள்ள இடத்தில், மேலே வெள்ளை கட்டி, மாவிலை, தோரணம், பூச்சரம் முதலியவற்றால் அலங்கரித்து கோமயத்தினால் தரை மெழுகப்பட வேண்டும். கிரியையின் போது தேவார திருவாசகங்கள், திருமுறைகள் ஓதப்படல் வேண்டும். மரணக் கிரியையில் சூர்ணோத்சவம் செய்யப்படும். நடுவில் ருத்திர கும்பம், மேற்குப் பக்கத்தில் புண்ணியமாக வாசன கும்பம். கிழக்குப்பக்கத்தில் உரல், உலக்கை , மணிவாசன கும்பம், கிழக்குப் பக்கத்தில் உரல், உலக்கை. மணி மயானத்துக்குக் கொண்டு செல்லப்படும் மண்குடக் கும்பம் ஆகியவை வைக்கப்படும். இக் கும்பத்தை மயானத்துக்குக்கொண்டு செல்வது வழமை.

மரணத்தவருக்கு அபிஷேகம் முதலியன செய்யும் பொருட்டு, பிரேதத்தை வீட்டில் தென்புறத்தில், தென்புறம் நோக்கிச் சிரசும், வடக்கு நோக்கிக் கால்களுமாகக் கிடத்தும் சிரசும், வடக்கு நோக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்களுமாகக் கிடத்துதல்வேண்டும். பின்னர் கிரியை செய்பவர் அரப்பு எண்ணெய் வைப்பார். ஆசௌசகாரரும் அரப்பு எண்ணெய் வைப்பார்கள். பின்னர் அரிசி மா, மஞ்சள்மா, அபிஷேகக்கூட்டு, பால், தயிர், இளநீர், அபிஷேகம் செய்தல்வேண்டும்.

கிரியை செய்பவர் மேற்குமுகமாக நின்று கீழிருந்து மேலாக தனது புறங்கையினால் வேறு ஒருவரின் உதவியுடன் இவ்வபிஷேகம் செய்யப்பட வேண்டும். பின்னர் கும்ப அபிஷேகம், பனனீர் முதலிய வாசனைத் திரவியங்களை சிரசில் சாத்தலாம். பின்னர் திருநீறு கீழிருந்து மேலாகச் சாத்தப்படல் வேண்டும். பின்னர் சுண்ணம் இடிக்கப்படும். அறுகு,மஞ்சள் பொடி என்பவற்றை உரலில் இட்டு மணி அடித்து, 81 பத மந்திரம் சொல்லி எட்டுத்தரும் இடித்த பின்பு, திருபொற்சுண்ணம் பாட்டுப்பாடி சுண்ணம். இடிக்கவேண்டும். சுண்ணப் பொடியை பிரேதத்தின் இரு கண்களிலும் சாத்தி, நீருடன் கலந்து முழு உடலுக்கும் தெளித்து, வழிபடல் வேண்டும்.

பின்னர் பிரேதத்தை மயானத்துக்குக் கொண்டு செல்லுதல் வேண்டும். கால்பக்கம் முன்னதாகக் கொண்டு செல்ல வேண்டும். கொள்ளி வைப்பவர் பூதவுடலுக்கு முன் செல்ல, மற்றவர்கள் பின் செல்ல வேண்டும். மயானத்தில் விறகு வடக்குத் தெற்காக அடுக்குதல் வேண்டும். பின் சுற்றத்தார் வாய்க்கரிசி போடுதல் வேண்டும். பூதவுடலின் சிரசு தென்பக்கம் வைக்கப்படுதல் வேண்டும். பின்னர் கிரியை செய்பவர் மண் குடத்தைத் தன் இடது தோளில் வைத்து, சிதையை இடப்பக்கமாகச் சுற்றி வந்து, காசுடன் வாய்க்கரிசி இட்டு மீண்டும் முன்போல் இடத்தோளில் குடத்தை வைத்து, மூன்றுமுறை சுற்றிவர வேண்டும். ஒவ்வொருமுறைக்கும் கத்தி நுனியினால் துவாரமிட்டு , குடநீர் ஒழுகும்படி செய்து மூன்றாவது முறை முடிவடைந்த பின் , தலைப்பக்கத்தில் தெற்கு முகமாக நின்று கொள்ளியை பிரேதத்தின் சிரசில் வைத்து, குடத்தை முன்புறமாக உடையும்படி போட்டுவிட்டு விழுந்து வணங்கித், திரும்பிப் பாராமல் செல்ல வேண்டும்.

மரணித்தவரும், கிரியை செய்பவரும் மச்ச, மாமிச போசனம் உண்ணாதவர்களாயின் இறந்தவர்களுக்கு மயானத்தில் உடன் அந்தியேட்டி செய்து தகனம் செய்யலாம்.

## காடாற்று( சாம்பல் அள்ளல்)

தகனத்திற்கு அடுத்த நாள் அல்லது மூன்றாம் ஐந்தாம் நாள், ஏழாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பதாம் நாட்கள் காடாற்று செய்யலாம்.

தகனம் செய்யப்பட்ட இடத்தை கால் பக்கமாக இருந்து தலை பக்கமாக தண்ணீர் ஊற்றி, அக்கினியை அணைக்கவும். தலைப்பக்கத்தில் விளக்கேற்றி கும்பம் வைத்து பூசை அபிஷேக திரவியங்கள் வைக்கவும், மண் கலசத்தில் பால் ஊற்றி அதை ஒரு இடத்தில் வைக்கவும். அங்கு எரிக்கப்பட்ட உடல் எலும்பு மேனியில் முழு உருவமாக இருப்பதாக பாவனை செய்து, கீழிருந்து மேலாக அபிஷேகத் திரவியங்களால் அபிஷேகம் செய்யவேண்டும். கிரியை செய்தவர் மேற்கு நோக்கி நின்று புறங்கையால் இன்னும் ஒருவரின் உதவியுடன் அபிஷேகம் செய்ய வேண்டும் பின்னர் முழங்கால்கள், நாபி, மார்பு, நெற்றி தலை, ஆகிய ஐந்து இடங்களிலும் உள்ள எலும்புகளில் விபூதி, சந்தனம், புஷ்பம் வைத்து கூடம், சாம்பிராணி, தீபம் காட்டி வணங்கி ஐந்து இடங்களில் உள்ள எலும்புகளில் ஒவ்வொன்றையும் எடுத்து தலைப்பக்கமாக உள்ள பாலுள்ள கலசம்(முட்டி) வைத்து அதை வெள்ளைத் துணியால் மூடிக்கட்டவும், பின்னர் எலும்புகள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து ஒரு கடகத்தில் வைக்கவும். பின்னர் அவ்விடத்தைச் சுத்தம் செய்து பண்படுத்தி நவதானியம் விதைத்து நெற்பொரி றொட்டி (மா, அடை) தாம்பூலம் முதலியவற்றை வைத்துப் படைத்துப் பின்னர் எடுத்த அஸ்தி சாம்பலையும் புண்ணிய தீர்த்தம் சமுத்திரம் ஆகியவற்றில் கர்த்தா வடக்கு முகமாக நின்று தெற்குப் பக்கமாக போட்டுக் கரைத்துவிடவும்.

கிரியைசெய்தவர் ஸ்நானம் செய்து நக்கினதானம் செய்ய வேண்டும். ஒரு குடத்தில் பச்சை அரிசி நிரப்பி துணியினால் கட்டி விளக்கில் நெய்யூற்றி வெங்கலப் பாத்திரமொன்றில் வைத்து சிவப்பிராமணர் ஒருவருக்கு இறந்தவரின் நிருவாணம், பசி, தாகம் இருள்களை நீக்கி ஆத்மாசாந்தி பெறக் கொடுக்கப்படுகின்றது

அஸ்தியில் ஒரு பகுதி அந்தியேட்டி கிரியைக்காகவோ அல்லது காசி கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் கரைப்பதற்கென எடுத்து வைப்பது தவறாகும்.

## எட்டுச் செலவு / எட்டுக்கிரியை

இது ஒரு நாட்டு வழக்கமாக வந்துள்ளது. தகன தினம் முதல் சபிண்டீகரணம் வரை இறந்தவரது படத்தை வைத்து வீட்டில் ஒரு இடத்தில் விளக்கேற்றி தண்ணீர் இளநீர் வைத்து நாம் உண்ணும் உணவில் ஒரு சிறு பகுதியை வைத்து சாம்பிராணி தீபம் காட்டி வணங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் வழமையும் உண்டு காடாற்றின் பின் எட்டு நாளைக்கு முன்னர் ஒரு தினத்தில் இறந்தவர்க்கு விரும்பிய உணவுகள் அனைத்தும் படைத்து நெருங்கிய உறவினர்களும் அன்று அங்கு சாப்பிடுவார்கள். (சில ஊர்களில் மச்ச மாமிசம் சாப்பிடுபவரென்றாலும் அந்தியேட்டி முடியும் வரை படைப்பதில்லை)

## அந்தியேட்டி/ கல்லெடுப்பு

இறந்த 21 நாட்களுக்கு மேல் 31 நாட்களுக்குள் செய்யப்படும். நதிக்கரையில், குளக்கரையில் அந்தியேட்டி செய்யப்படும். தர்ப்பையில் பிரேத சரீரத்துக்குப் பதிலாக புத்தலிகாவை செய்து தகனம் செய்வார்கள்.

இதைப் புனரத்தகனம் எனக் குறிப்பிடுவார். பின்பு அங்க கல்லு ஸ்தாபித்து அதற்கு அபிஷேகம், பூசை செய்து தர்ப்பணம், பிண்டம் ருத்திர பலி பிரபூதபலி (முன்னர் எட்டுக்குச் செய்தல் போல்) செய்யப்படும். இங்கு 30 பிண்டங்கள் இடப்படும். இப் பிண்டங்கள் பச்சை அரிசி சாதம் கறி வகைகள், பலகார வகைகள், பழ வகைகள் பிசைந்து உருட்டி இட வேண்டும. வாஸோதம் (சீலையோடு சேர்த்துத் தர்ப்பணம்) செய்யப்படும். இங்கு 525 தர்ப்பணம் செய்யப்படும். இவை ஏகோத்திர விருத்தி என அழைக்கப்படும்.

ருத்திரபலி சிவப்பிரீதியின் பொருட்டுச் செய்யப்படுவது. பின்னர் பாஷாணத்துக்குத் தூப தீபம் காட்டி பூசை முடித்து கும்பம் பாஷாணம் பிண்டம் ஆகியவற்றை நீர்நிலை ஒன்றிற்கு எடுத்துச் சென்று கிரியை செய்தவர் வடக்கு முகமாக இடுப்பளவு தண்ணீரில் நின்று தலைக்கு மேலாகத் தெற்குப் பக்கமாகப் பிண்டத்தையும் கும்பத்தை வடக்கு பக்கமாகவும் பாஷாணத்தை தலைக்கு மேலாக தெற்கு பக்கமாகவும் தண்ணீரில் விட்டு விட்டு அதில் ஸ்நானம் செய்துவிட்டு வீட்டுவாசலை வந்தடைந்து வேப்பிலை தின்று அக்கினி சாணம் மண் வெண்கடுகு ஆகியவற்றைத் தொட்டு வீட்டினுள் செல்வார் கிரியை செய்தவருக்கு ஆரத்தி எடுப்பதும் உண்டு.

## வீட்டுக்கிரியை சபிண்டீகரணம்

வீடு கழுவி சுத்தம் செய்து புண்ணியவாசனம் செய்த பின்னர் வீட்டுக்கிரியை செய்யவேண்டும். அந்தியேட்டிக் கிரியை 30ஆம் நாளும் வீட்டுக்கிரியை 31 ஆம் நாளும் நம்மவர்கள் செய்வது வழமையாக உள்ளது. எமக்கு ஆசௌசம் 30 நாட்கள் அதாவது 31ஆம் நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில் ஆசௌசம் முடியும் 30ஆம் நாள் புண்ணியவாசனம் செய்வது சரியல்ல.

வீட்டுக்கிரியை பிரமண ஆசாரியரைக் கொண்டு செய்தல் வேண்டும். முதலில் விக்கினேஸ்வர பூசை புண்ணியவாசனம் பஞ்சகவ்விய பூசை முதலிய கிரியைகளைச் செய்து நவசிராத்தம், ஏகோத்திர விருத்தி, சம்கிதை, இடபதானம், ஏகோதிட்டம் மாசிகங்கள் சோதகும்ப சிரார்த்தம் சபிண்டீகரணம் ஆகிய கிரியைகள் நடைபெறும்.

## ஆட்டைத்திவசம்

முதலாவது வருட முடிவில் இறந்த திதியில் செய்யப்படும் சிரார்த்தம். இத்தோடு அபரக்கிரியைகள் பூர்த்தியாகும். பின்னர் வருடா வருடம் வரும் சிரார்த்த திதியில் சிரார்த்தம் செய்யவும்.

சிரார்த்தம் செய்ய வசதியில்லாதவர்கள் ஆலயம் சென்று பூசை வழிபாடு செய்யலாம்.

## மஹாளயம்

புரட்டாதி மாதத்து அமாவாசைக்கு 15 நாட்கள் மஹாளயம் செய்தல் தந்தை தாய் இருவரும் இறந்திருப்பின் இருவருக்குமாக தனித்தனியே பிண்டமிடல் வேண்டும். இது பிதிர்களுக்கு இராப் போசனமாகும்.

## தநிஷ்டா பஞ்சமி

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்சத்திரங்களில் மரணித்தால் பஞ்சமி தோஷமுண்டு. இறந்த வீட்டில் கும்பம் தீபம் ஜலம் வைத்து பசுமாடு கட்டிவைத்து வீட்டில் நெற்பொரி நவதானியம் தூவுதல் வேண்டும. அவிட்ட நட்சத்திரத்துக்கு ஆறுமாதம சதயத்திற்கு மூன்று மாதம். பூரட்டாதிக்கு ஒன்றரை மாதம், உத்திரட்டாதிக்கு ஒரு மாதம், ரேவதிக்கு அரை மாதம் தோஷம் நீங்க பஞ்சமி செய்யவும்.

தாய் தகப்பன் இறந்த ஒரு வருடத்திற்குள் தலயாத்திரை செய்தல் கூடாது. சுப காரியங்களும் செய்தல் கூடாது.

இது அபரக்கிரயைகள் பற்றிய சிறு தொகுப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தான பலன்

| | | |
|---|---|---|
| அன்ன தானம் | – | தரித்திரம் நீங்கும். |
| வஸ்திர தானம் | – | ஆயுள் விருத்தி உண்டாகும். |
| பூமி தானம் | – | பிரம்மலோகம் ஈஸ்வரதரிசனம் கிட்டும். |
| தேன் தானம் | – | புத்திரபாக்கியம் உண்டாகும். |
| கோ தானம் | – | ரிஷிக்கடன், தேவகடன், பிதிர்க்கடன், ஆகியவற்றை நீக்கும். |
| நெல்லிக்கனி தானம் | – | ஞானம் உண்டாகும். |
| தீப தானம் | – | பாவங்களைப் போக்கும். |
| நெய் தானம் | – | நோய் தீர்க்கும். |
| பால் தானம் | – | துக்கம் தீர்க்கும். |
| தயிர் தானம் | – | இந்திரிய விருத்தி உண்டாகும். |
| தேங்காய் தானம் | – | நினைத்த காரியம் முடியும். |
| பழங்கள் தானம் | – | புத்தியும், சித்தியும் கிட்டும். |
| தங்க தானம் | – | குடும்ப தோசம் நீங்கும். |

## மனித தர்மம்

| | | |
|---|---|---|
| ஏழ்மையிலும் | – | நேர்மை |
| கோபத்திலும் | – | பொறுமை |
| தோல்வியிலும் | – | விடாமுயற்சி |
| தரித்திரத்திலும் | – | பரோபகாரம் |
| துன்பத்திலும் | – | தைரியம் |
| செல்வத்திலும் | – | எளிமை |
| பதவியிலும் | – | பண்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பர்களே

| | | |
|---|---|---|
| நல்ல நாள் | - | இன்று |
| நல்ல வெகுமதி | - | மன்னிப்பு |
| அறியக்கூடாதது | - | அடுத்தவன் செயலை |
| இருக்க வேண்டியது | - | மானம் |
| இருக்க கூடாதது | - | ஆணவம் |
| தேவைக்கேற்றது | - | சாமர்த்தியம் |
| தேவையற்றது | - | விவாதம் |
| எதிலும் சுலபமானது | - | குற்றம் காணல் |
| எதிலும் கடினமானது | - | பிழையின்றி வாழ்தல் |
| மேல் தரமானது | - | நட்பு |
| கீழ் தரமானது | - | துரோகம் |
| செய்ய வேண்டியது | - | உதவி |
| செய்ய கூடாதது | - | உபத்திரம் |
| அறிய வேண்டியது | - | உலக செயலை |
| அடங்க நினைப்பது | - | தாய் தந்தைக்கு |
| அடக்க நினைப்பது | - | உனது மனதை |
| நம்பக் கூடியது | - | மனசாட்சியை |
| நம்பக் கூடாதது | - | வதந்தியை |
| பார்க்க கூடியது | - | பகுத்தறிவு |
| பாரக்கக் கூடாததது | - | உன் மரணம் |
| வாழத்தேவையானது | - | நம்பிக்கை |
| வாழத்தேவையற்றது | - | சந்தேகம் |
| கொடுக்கக்கூடியது | - | அன்பு |
| தடுக்கக் கூடியது | - | கோபம் |
| இழக்கக் கூடியது | - | பகை |
| இரக்கமான உணர்வு | - | பாசம் |
| புனிதமான உணர்வு | - | அன்பு |
| பகுத்தறிவான உணர்வு | - | இரக்கம் |
| ஆணுக்கு தேவையானது | - | உழைப்பு |
| பெண்ணுக்குத் தேவையானது | - | அடக்கம் |
| பெண்ணுக்கு தேவையற்றது | - | தனிமை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடைச் சுற்றமே! நண்பர்களே
# என் ஆத்மார்த்த செய்தி

நான் பிறந்ததிலிருந்து
ஆடி ஓடி பாடித் திரிந்த என் வாழ்வில்
ஏற்பட்ட இன்ப துன்பங்களில்
எல்லாம் பங்கு கொண்டு
என்னோடு தோளோடு தோள் நின்று உழைத்தீர்கள்.
வருவதும் போவதும் இயற்கையின் நியதி.
சீவன் முத்தியே மிகப் பெரும் பேறு .
வந்ததற்கும் சென்றதற்கும் இடையில்
தங்களிடம் ஏற்பட்ட தொடர்புகளை
மிகப் பெரும் பாக்கியமாகக் கொள்கின்றேன்.
நான் வாழ்ந்த நாட்களில் ஏற்படுத்திய சுக துக்கங்களில்
ஏற்பட்ட கீற்றுக்களை நற் கீதங்களாக்கிக் கொள்ளுங்கள்.
மீண்டும் ஒரு தடவை
என் இனிய சுற்றமே! நண்பர்களே !
நன்றி கூறி நலமுடன் வாழச் செல்கின்றேன்.

## தேற்றம்

யார் யாரே ஒருவரின் பிழையுமில்லை.
நேயம் உம் பிழையும் இல்லை.
நோயின் பிழையுமில்லை.
உலக மெல்லாம் இயங்கிவரும்
ஈசனவன் பிழையிதாமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் சுந்தரராசா சீவரத்தினம் அவர்களின் 31 ஆம் நாள் திதியை

# கண்ணீர் அஞ்சலி....

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 06 |  | 03 |
| 06 | | 02 |
| 1958 | | 2021 |

அமரர்

## சுந்தரராசா சீவரத்தினம்

மீளாத்துயில் கொண்டு எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரோ?
கலையாத நினைவுகளுடன்
உதிரும் கண்ணீர்ப்
பூக்களால் அர்ச்சித்து உங்கள்
ஆத்மா சாந்தியடைய
எங்கள் கண்ணீர்த் துளிகளைக்
காணிக்கையாக்குகின்றோம்.

இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு இவரது ஆதமா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

## கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தவர்கள்

01. நண்பர்கள்

## பதாகைகள் பிரசுரித்தவர்கள்

01. S.R.J Lion சுதன் ஆசிரியர் குடும்பம் கிளிநொச்சி.
02. சு. பசுபதிப்பிள்ளை குடும்பம் திருநகர், கிளிநொச்சி.
03. கிளிநொச்சி லயன்ஸ் கழகம்
04. றேகன் கட்டடப்பொருட்கள் வாணிபம் ( D10, சந்தையடி உருத்ததிரபுரம், கிளிநொச்சி.)
05. உழவர் ஒன்றியம் விளையாட்டுக்கழகம் ( சனசமூக நிலையம், சுவழாவடி, உருத்திரபுரம். )
06. உருத்திரபுரம் உதவும் கரங்கள் (கனடா)
07. யதார்த்தனின் நண்பர்கள் (கிளி/ உரு.ம.வி 2010 O/L, 2013 A/L)
08. 2009 O/L மாணவர்கள் கிளி/ சிவநகர் அ.த.க.பா
09. இ.பிரபாகரன் குடும்பம்
10. கமக்கார அமைப்பு, சிவநகர்
11. மீள் எழுச்சி திட்டம், சிவநகர்
12. கிராம அபிவிருத்திச் சங்கம், சிவநகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"**

எமையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எமது குடும்பத் தலைவரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்து உதவி புரிந்தும், தொலைபேசியில் அனுதாபம் தெரிவித்தும், பாதாகைகள் வெளியிட்டும், கண்ணீர்ப்பிரசுரங்கள் வெளியிட்டும், தந்தையின் இறுதியாத்திரையில் கலந்து பல்வேறு வழிகளிலும் உதவிய உற்றார் உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், அஞ்சலி உரை ஆற்றியவர்களுக்கும், அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகளிலும் கலந்து உதவிகளும், ஆதரவுகளும் வழங்கித் தேற்றிய அன்பு நிறைந்த உள்ளங்களுக்கும் மற்றும் இம் மலரைச் சிறப்புற அச்சிட்டு தந்த வேழன் அச்சகத்தாருக்கும் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



**இல: 91/1,**
**சிவநகர், உருத்திரபுரம்**

**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேழன் பதிப்பகம், கிளிநொச்சி .021 228 5579

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org